உ

ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி


"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"

அபிராமி பட்டர்

விக்கிரம வருடம் தை 1ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2031 (15-01-2001)

வெளியீட்டாளர்

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்



மலர்: 1 இதழ்: 4

7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2. TEL: (604) 521-3472

பேனபி பதிவாழும் துர்க்காவே நீ
எம்மை பேணிக்காப்பாய் துணையாக
போகின்ற பாதையெல்லாம் துர்க்காவே
எங்கள் துணையாக வந்திடுவாய் தூயவளே

கண்ணீரில் நாம்வாழ்ந்து துர்க்காவே
காலமெல்லாம் கரைந்தோமம்மா துர்க்காவே
பன்னீரில் எமைவளர்ப்பாய் துர்க்காவே
பணிவோமே தாழ்பணிந்து துர்க்காவே

புலம்பெயர்ந்து வந்தோமே துர்க்காவே
புதுமையாக கண்டோமே துர்க்காவே
பலம்தந்து காத்திடுவாய் துர்க்காவே
பணிசெய்து தீர்த்திடுவோம் துர்க்காவே

ஞாலத்தில் நீ பெரிது துர்க்காவே
ஞாயத்தில் நீ துரித துர்க்காவே
பாவத்தில் நாம்விழுந்தோம் துர்க்காவே
பரிவுடனே தூக்கிடுவாய் துர்க்காவே

ஈழத்தில் நாமுந்தன் துர்க்காவே
இணைபிரியாதிருந்துவந்தோம் துர்க்காவே
இங்குமுன்னைக் கண்டுகொண்டோம் துர்க்காவே
இல்லங்களை வாழவைப்பாய் துர்க்காவே


கண்டுகொண்டோம் நாங்களுன்னைக் கனடாவிலே
கண்துடைத்துக் காத்திடுவாய் துர்க்காவே
வந்துநாங்கள் வணங்கிநின்றோம் துர்க்காவே
வாசலிலே வீழ்ந்து நின்றோம் துர்க்காவே

அடிஎடுத்து அளந்துவந்தோம் துர்க்காவே
அடியவரை அணைத்துக்கொள்ளும் துர்க்காவே
படியேறிப் பணிந்திடுவோம் துர்க்காவே
உன் பாதங்களில் வீழ்ந்திடுவோம் துர்க்காவே

பிழையேதும் செய்திருந்தால் துர்க்காவே
பெரியவளே மறந்திடுவாய் துர்க்காவே
ஒருபோதும் உனைமறவா துர்க்காவே
உறவோடு வாழவேண்டும் துர்க்காவே

தாயோடுசேயாக துர்க்காவே
தரணியையும் காத்திடுவாய் துர்க்காவே .

<u>க. கருணாகரன்.</u>



திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

நிலவில் இருந்து இறங்கி வந்து
உலகம் காக்கும் எம் தாயே!
வன்கூவர் மண்தேடி
பேணபி பதி நாடி நிலவிலிருந்து.........

துருவம் மாறி வந்த போதும்
உருவம் மாறவில்லை - தமிழன்
உருவம் மாறவில்லை !
விழியில் வழியும் நீரைத்துடைக்க
வழியில் வந்து நின்றோம் - உந்தன்
வழியில் வந்து நின்றோம் !
மடியில் எம்மை அணைப்பாயே - கால்
அடியில் காத்தும் கிடப்போம் !
தாயே ! துரக்கா ! - நிலவிலிருந்து.......

வருடம் ஒன்று ஆகு முன்னே
வண்ணத் தேரை கொண்டாய் - உனக்காய்
வண்ணத் தேரைக்கொண்டாய்
வந்த சில வந்த நாட்களுக்குள்ளே
சொந்த மண்ணும் கண்டாய் - இருக்க
சொந்த மண்ணும் கண்டாய்
என்ன என்ன சொல்ல ? - உந்தன்
எண்ணரிய ஆற்றல் ! அம்மா !
தாயே ! துர்க்கா ! நிலவிலிருந்து......... ..

ஞாலம் வாழும் வரையில் நாளும்
பூசை செய்து வருவோம் - நாங்கள்
பூசை செய்து வருவோம் !
காலம் காலமாக எம்மைக்
காவல் செய்துவருவாய் - வாழ்வில்
காவல் செய்து வருவாய் !
காலன் தேடும் நேரம்அம்மா - உந்தன்
காலில் எம்மை சேர்ப்பாயே !
தாயே ! துர்க்கா ! நிலவிலிருந்து........

*கவிஞர். திருமதி. கோதை அமுதன்*

# ஆலயமும் நாமும்

" மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர்களின் பழ மொழிகளில் ஒன்று. இந்த தை மாத இதழில் மீண்டுமொரு முறை எங்களது எண்ணங்களை அம்பிகை அடியார்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் பெருமை கொள்ளுகிறோம். இந்த நிர்வாக சபை பொறுபெடுத்து ஒரு வருடம் பூர்த்தியடையும் இந்த நேரத்தில் இந்த நிர்வாகம் தனது ஆலயத் திருப்பணியை எவ்வாரு பொறுப்புடன் செய்தது என்பதை நிர்வாகசபை உறுபினர் மூலமே நாம் அறிந்து கொள்ளுவோம்.

## எண்ணங்கள்

திருவருள் துணையினால் 1999ம் ஆண்டு ஜனவரிமாதம் முதலாம் திகதி, அருள்மிகு துர்காதேவி ஆலயத்தை பொது மக்களின் ஆதரவோடும், அனுசரனையோடும் பொதுமக்களின் ஆலயமாக்கினோம். வாடகை இடத்திலே அமைந்த ஆலயத்தை, ஒன்பது மாதத்திற்குள், யாவரும் அதிசயிக்கத்தக்க வகையில், சொந்தமான காணியில், சிறப்பான கட்டிடத்தில், அன்னை துர்க்கையை ஸ்தாபனம் செய்து, அடியார்கள் பக்தி சிரத்தையோடு பிரார்த்தித்து, நல்வாழ்வு வாழும் வண்ணம் அமைப்பதற்கு, அன்னையின் திருவருள் கூட்டியது.

அடியவர்களின் பலரின் நன்கொடை, வட்டியில்லாக்கடன் போன்ற, வழிகளிலே நிதியைப் பெற்று, இவ்வரிய திருத்தொண்டைச் செய்ய முடிந்தது. உள்ளூர் தவிர சியாற்ரல் (அமெரிக்கா) போன்ற இடங்களில் வாழும் அன்பர்கள் பலரும் நிதி உதவி செய்தார்கள். அவர்கள் யாவருக்கும் எமது பாராட்டும் நன்றியும் என்றும் உண்டு.

எமது சமய பாரம்பரியப்படி பூசைகள், திருவிழாக்கள்,மற்றும் சமயபாட, தமிழ், யோகக்கலை வகுப்புக்களும் செவ்வனே நடைபெறுகின்றன. கோவிலோடு அமைந்த மண்டபத்திலே திருமணவைபவங்கள் மிகு சிறப்பாக நடைபெறுவதையும் பலர் பாராட்டுகிறார்கள்.

எல்லாம் வல்ல சக்தியின் அருளால். ஆலயத்தின் கடனைக் கூடிய சீக்கிரம் ஈடுசெய்ய எல்லோருடைய முயற்சியும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியம். அங்கத்தவர்களின் மாதாந்த சந்தா, பூசை, அபிஷேகம் போன்றவற்றால்பெறும் பணம். நன்கொடை வழங்கும் பெரியார்களின் நிதியுதவி போன்ற வழிகளிலே நிதி நிலைமையை மேம்படுத்தலாம். என்ற பூரண நம்பிக்கை என்றும் உண்டு. அங்கிகரிக்கப்பட்ட தர்மஸ்தாபனமாக ( Charitable Organisation ) அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்டமையால் நிதி உதவி செய்வதற்குப் பல அன்பர்கள் முன்வருகிறார்கள்.

ஆலய வளர்ச்சிக்கு அயராத ஒத்துழைப்பு வழங்கும் ஆலயக்குருக்கள் சிவஸ்ரீ ந.சண்முகரட்ணசர்மா அவர்களுக்கும், ஆலோசனைச் சபையினர், நிர்வாக சபை அங்கத்தவர்கள், உபகுழு அங்கத்தவர்கள், ஆலய அங்கத்தவர்கள், தொண்டர் சபையினர், அடியார்கள், யாவருக்கும் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்து. யாவர்க்கும் அன்னையின் அருள் என்றும் உண்டு என்ற நம்பிக்கையோடு பிராத்தித்து செயல்படுவோமாக.

எண்ணிய எண்ணியாங் கெய்துப,
எண்ணியா திண்ணியராகப் பெறின்'.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'.

(திருவள்ளுவர்)

திரு. க. குமாரசாமி
(நிர்வாகசபைத் தலைவர்)

எந்தவொரு நிறுவனமும் திறமையாக செயற்படுவது அதனை நடாத்தும் நிர்வாகத்தில் தங்கி இருக்கிறது. எங்கள் ஆலய வளர்சிக்கு அரும் தொண்டாற்றிவரும் ஆலய நிர்வாக சபைக்கு இது மிகமிக பொருத்தமானதாக இருக்கும்.

துர்க்கை அம்மன் ஆலய தொண்டர் என்ற காரணத்தால் எமது ஒரு வருடகால சேவையின் பூர்த்தியை முன்னிட்டு எமது அனுபவங்களை அம்மன் அடியார்களுடன் இம்மஞ்சரி மூலம் பகிர்ந்து கொள்வதில் பெருமை கொளகிறோம்.

எமது ஆலயத்தின் வளர்ச்சி பற்றியும் அருள் பொங்கும் அன்னையின் பேரருட் சக்தி பற்றியும் பேசாதவர்கள் கிடையாது. எங்கள் துர்கை அம்மன் ஒரு அருட்கடல். அன்னையை நினைத்து வேண்டியதை பெற்றவர்கள் ஏராளம், இதை நாம் சொலலித்தான் அடியார்களுக்கு தெரியவேண்டியதில்லை.

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இளம் வயதினருக்கு கல்வியறிவு பழக்க வழக்கங்கள், ஒழுக்கம், பெரியோர்களை மதித்தல் போன்றவற்றை நாம் எமது ஆலயத்தில் பல வழிகளில் கற்பித்து வருகிறோம். உதாரணமாக தமிழ், சமய, யோகவகுப்புக்கள் அத்தோடு பூசை முடிந்ததும் சிறுவர்கள் தீர்த்தம், சந்தனம், குங்குமம் வழங்குதல், மணியடித்தல், சங்கு ஊதுதல் தாளம் போடுதல், பெரியோர்களுடன் சேர்ந்து பஜனை பாடுதல் போன்றவற்றில் ஈடுபடுத்தி, அதன் அரத்தத்தை புரிய வைக்கிறோம். இதன் மூலம் இளம் வயதினர்களுக்கு அடக்கம், பணிவு எந்தக்காரியத்தையும் முன்னடாத்தி செய்யக் கூடிய குணவியல்புகளை வளர்க்க ஆலய நடவடிக்கைகள் பெரிதும் உதவுகின்றது (Leader ship).

பொருளாளர் என்ற வகையில் எமது ஆலயத்தின் இந்த ஆண்டிற்கான நிதி விபரங்களை வேறு பக்கத்தில் தருகிறோம். ஆலயத்திற்கு நிதியுதவி வழங்கிய அனைத்து அடியார்களுக்கும் நிர்வாகத்தின் சார்பாக நன்றி கூறக்கடைமை பட்டிருக்கிறோம். இதே ரீதியில் அடியார்கள் நிதி யுதவி வழங்கும் பட்சத்தில் எமது கடன் பழு நீங்கி விடும் என்தில் சிறிதும் ஐயமில்லை. எமது சமுதாயம், எமது இனம் சிறந்து வாழவேண்டும். கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து அவர்களுக்கேற்ற துறைகளில் தொழில் வாய்ப்பை பெற்று மனநிம்மதியுடன் வாழ எல்லாம் வல்ல துர்க்கை அம்மனை வேண்டுகிறோம்.

பொருளாளர்:திரு. க. தில்லைநாதன்
உப பொருளாளர்: திரு. தா. முருகதாசன்

மனித வாழ்வு என்பது அன்பினால் பிணைக்கப்பட வேண்டிய அர்தமுள்ள ஒரு புனிதமான வாழ்வு. அதை வளர்ந்துவிட்ட விஞ்ஞானத்தினால் வழங்க முடியாது. ஆன்மீகஞானமாகிய சமயங்களே அந்த நல்வாழ்வை எமக்கு நல்கின்றன. தனிமனித நல்வாழ்வுக்கும், ஆரோக்கியமான குடும்ப கட்டமைப்புக்கும் ஆன்ம ஈடேறத்திற்கும் வழிவகுத்து தரும் மெய்ச்சமயங்கள் எத்துணை அவசியம் என்பதை விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. வாழ்வை தேடி தாயகத்தை விட்டு புலம் பெயர்ந்த எமது மக்களுக்கும் அமைதியை தேடும் அனைத்து மக்களுக்கும் ஆறுதல் தருகின்ற கலங்கரை விளக்கங்களாக ஆலயங்கள் அமைகின்றன. எங்கள் மதம், மொழி, கலை, பண்பாடுகள் பேணிக்காக்கப்பட்டு, இன்றைய இளம் தலை முறைக்கு சிதைவின்றி கொடுக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கங்களுடன் ஆலயங்களின் செயற்பாடுகள் அமையவேண்டும். அந்தவகையில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திலும் அயல்நாடான அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் மாநிலத்திலும் உள்ள எமது மக்களுக்கென்று எங்கள் சைவ மரபுகளை பேணுகின்று மக்கள் ஆலயம் இல்லையே என்ற குறையை போக்கியது எங்கள் துர்க்கை அம்மன் ஆலயமே.

ஆலயங்களை அமைத்து, திருவிழாக்களை, சிறப்புறச் செய்து மகிழ்வதனால் மட்டும் ஆலயத்தின் நோக்கங்கள் பூரணமாக்கப் படுவதில்லை. எங்கள் அன்னைக்கு சொந்தக்காணியில் மிகக்குறுகிய காலத்திற்குள் புனிதமான கட்டிடத்தில் ஆலயம் அமைத்ததுடன், ஆலயத்தின் நடவடிக்கைகள் நிர்வாகசபையினரின் செய்பாடுகள் பற்றி சுருக்கமாக குறிப்பிட விரும்புகிறேன். ஆலயம் அமைத்து ஆன்மீக விழிப்புணர்சியை ஏற்படுத்தும் வகையில் பல வழிகளிலும் கடந்த இரண்டு வருடங்களாக ஆலயநிர்வாக சபை இயங்கி வருவது கண்கூடு. சமய விழாக்களை மட்டும் செய்வதோடு நிற்காமல் மாமுனிவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் போன்ற தவயோகிகளை வருடாவருடம் ஆலயத்திற்கு அழைத்து, ஆசிகள் பெற்று, அறநெறி அன்னை தங்கம்மா அப்பா குட்டி போன்ற மதத்தலைவர்களை போற்றி கௌரவித்து, சமய, யோக, தமிழ் சங்கீத, நடன, வகுப்புக்கள் நாடத்தி வருவதுடன், செவ்வாய், வெள்ளி, ஞாயிறு, தினங்களில் அன்னைக்குரிய ஆராதனைகள் முடிந்ததும் சிந்தனை சீராகவேண்டி சைவ நற்சிந்தனையும், தியானமும், நடை பெற்றபின்பு அனைவருக்கும் அன்னதானம் வழங்கிவரும் அற்புதமான நடவடிக்கைகள் எதுவித குறைவுமின்றி அன்னையின் அருளால் தவறாது நடைபெற்று வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். கலை, பண்பாடுகளை போற்றும் வகையில் நடைபெறும். கலைவிழாக்களை நடாத்தி ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து, கலைஞர்களை கௌரவித்து வருவதும் நீங்கள் அறிந்ததே. இத்தனை திருத்தொண்டுகளையும் சிறப்புடன் நிறைவு பெறச்செய்து. அன்னையின் அடியார்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அன்புணர்வு பெருகும் வகையில் மற்ற ஆலயங்களுக்கு முன் உதாரணமாக அன்னையின் ஆலயத்தை வளர்த்து வரும் நிர்வாக சபைத் தொண்டர்களையும், ஆதரவு நல்கும் அனைத்து உள்ளங்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த ஆலயத்தின் நிர்வாகசபை உறுப்பினர்கள், உபகுழு உறுப்பினர்கள், சகல நடவடிக்கைகளிலும் முன்னின்று உழைக்கும் தொண்டர்கள், அன்னையின் அடியார்கள் அனைவரதும் பக்தி பூர்வமான பங்களிப்புக்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து 'நாவூறு' படாமல் இருக்க அன்னை அருள் புரிய வேண்டுகிறேன்.

ஆலயத்தின் ஆலோசகர் குழுவின் சார்பில் அனைத்து அன்புள்ளங்களுக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளும் இதே வேளையில் கடந்த இரண்டு வருட காலமாக அன்னையின் ஆலயத்திருத் தொண்டில் பங்குகொள்ளும் பாக்கியத்தை அறம் செய்யும் அரிய சந்தர்ப்பத்தை இச்சிறியேனுக்கு அருளிய அன்னைக்கும், அன்னையின் திருத்தொண்டில் என்னையும் பங்குகொள்ள வைத்த அன்புள்ளங்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் கூறி. தாயகத்தில் கண்ணீரும், செந்நீரும், சிந்தும் எமது மக்களுக்கு விடிவும், விடுதலையும் விரைவில் கிட்ட வேண்டும் என்று அன்னையின் அருள் வேண்டி பிரார்த்திக்க அனைவரையும் வேண்டுகிறேன்.

திரு. க. நடராஜ
(ஆலோசகர்குழு உறுப்பினர்)

## ஆலய பூசை நேரங்கள்

தினம் தோறும் மதியநேரப்பூசை                                பகல் 12.00 மணிக்கு நடைபெறும்

தினம் தோறும் இரவு நேரப்பூசை                                இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இராகு காலப்பூசை    பிரதி செவ்வாய் தோறும்  பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

ஆலயத்தில் அடுத்த முதல் மூன்று மாதத்திற்கு நடைபெற இருக்கும் விசேட விரதங்கள்.

14-01-2001 - ஞாயிறுக்கிழமை - தை மாதம் 1ம் திகதி தைப் பொங்கல்.

19-01-2001 - வெள்ளிக்கிழமை - தை 6ம் திகதி ஏகாதசி விரதம்.

21-1-2001 - ஞாயிறுக்கிழமை ☐ தை 8ம் திகதி பிரதோஷ விரதம்.

23-1-2001 ☐ செவ்வாய்கிழமை ☐ தை 10ம் திகதி அமாவாசை விரதம்.

28-01-2001 ☐ ஞாயிற்றுக்கிழமை ☐ தை 15ம் திகதி சதுர்த்தி விரதம்.

30-01-2001 ☐ செவ்வாய்கிழமை ☐ தை 17ம் திகதி ஷஷ்டி விரதம்.

02-02-2001 - வெள்ளிக்கிழமை ☐ தை 20ம் திகதி கார்த்திகை விரதம்.

04-02-2001 ☐ ஞாயிறுக்கிழமை ☐ தை 22ம் திகதி ஏகாதசி விரதம்.

05-02-2001 ☐ திங்கட்கிழமை ☐ தை 23ம் திகதி பிரதோஷ விரதம்.

06-02-2001 - செவ்வாய்கிழமை ☐ தை 24ம் திகதி தைப் பூசம்.

07-02-2001 - புதன்கிழமை ☐ தை 25ம் திகதி பௌர்ணமி விரதம்.

18-02-2001 - ஞாயிற்றுக்கிழமை ☐ மாசி 7ம் திகதி ஏகாதசி விரதம்.

20-02-2001 ☐ செவ்வாய்கிழமை ☐ மாசி 9ம் திகதி பிரதோஷ விரதம்.

21-01-2001 - புதன்கிழமை □ மாசி 10ம் திகதி மஹா சிவராத்திரி.

22-02-2001 - வியாழக்கிழமை மாசி 11ம் திகி அமாவாசை விரதம்.

26-02-2001 - திங்கட்கிழமை □ மாசி 15ம் திகதி சதுர்த்தி விரதம்.

28-02-2001 - புதன்கிழமை - மாசி 17ம் திகதி ஷஷ்டி விரதம்.

01-03-2001 - வியாழக்கிழமை □ மாசி 18ம் திகதி கார்த்திகை விரதம்.

05-03-2001 - திங்கட்கிழமை - மாசி 22ம் திகதி ஏகாதசி விரதம்.

07-03-2001 - புதன்கிழமை □ மாசி 24ம் திகதி பிரதோஷ விரதம்.

08-03-2001 - வியாழக்கிழமை □ மாசி 25ம் திகதி மாசி மகம், நடேசரபிசேகம்.

20-03-2001 - செவ்வாய்கிழமை □ பங்குனி 7ம் திகதி ஏகாதசி விரதம்.

21-03-2001 - புதன்கிழமை □ பங்குனி 8ம் திகதி பிரதோச விரதம்.

24-03-2001 - சனிக்கிழமை - பங்குனி 11ம் திகதி அமாவாசை விரதம்.

25-03-2001 □ ஞாயிற்றுக்கிழமை □ பங்குனி 12ம் திகதி சித்திகணபதி விரதம்.

28-03-2001 - புதன்கிழமை - பங்குனி 15ம் திகதி சதுர்தி விரதம், கார்திகை விரதம்.

30-03-2001 - வெள்ளிக்கிழமை □ பங்குனி 17ம் திகதி சஷ்டி விரதம்.

04-04-2001 - புதன்கிழமை - பங்குனி 22ம் திகதி ஏகாதசி விரதம்.

05-04-2001 - வியாழக்கிழமை □ பங்குனி 23ம் திகதி பிரதோச விரதம்.

06-04-2001 - வெள்ளிக்கிழமை □ பங்குனி 24ம் திகதி பங்குனி உத்தரம்.

07-04-2001 - சனிக்கிழமை □ பங்குனி 25ம் திகதி பௌர்ணமி விரதம், நவதீப் பூசை.

13-04-2001 - வெள்ளிக்கிழமை □ சித்திரை 1ம் திகதி தமிழ் புத்தாண்டு.
(விஷு வருடம்)

# நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?

கடவுள் நினைப்பு எல்லோருக்கும் எளிதில் வாய்ப்பதற்கு நம்முன்னோர் பல வழிகளை கையாண்டுள்ளனர். அவற்றுள் ஒன்றுதான் கூட்டுவழிபாடு. கூடித் தொழுவதால் துன்ப கள் மறைகிறது. ஏகாக்கிரக சிந்தை ஏற்படுகிறது. மன ஒருமை வாய்க்கிறது. இதன் லம் உணர்வு நல்லுணர்வாக மாறுகிறது. அது காலப்போக்கில் தெய்வ உணர்வாகவும் தெய்வீக உணர்வாககூம் பரிணாமம் அடைகிறது.

"உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு. இறைவனுக்கு உணர்வு என்று ஓர் பெயர் உண்டு. அளவுப் பிரமாணம் அளவைப் பிரமாணம் காட்சிப் பிரமாணம் முதலிய அளவுகோல்களால் அளக்கமுடியாமல் ஒவ்வொருவர் செய்யும் ஜபவலிமை சாதனைத்திறன் நல்லுணர்வு போன்றவற்றால் இறைவனை அடைவதால் இறைவனுக்கு "உணர்வு" என்று பெயர் உண்டு.

"நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"
என்கிறார் மணிவாசகப் பெருமான்.

நல்ல கருத்துக்களை உணர்வு உடையார் முன் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் அச்சொல்லுக்கு மதிப்பு இருக்கின்றது. மற்றும்படிக்கு அது விழலுக்கு இறைந்த நீர். இதனை வள்ளுவர் ஒரு உவமை மூலம் சொல்லுவார்.

"உணர்வதுடையார் முன் சொல்ல வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று"
நல்ல பயன்தரும் தோட்டத்தினுள் தண்ணீரை இறைத்தால் எப்படிப் பயன் தருமோ அப்படி இறைவனை நினைப்பவர்கள் முன் நல்ல கருத்துக்களை இறைத்தால் அவர்கள் இறைவனை அடைவார்கள் என்பதாம்.

பொதுவில் உணர்வுகள் இரண்டு வகை. அதில் ஒன்று பொய்யுணர்வு மற்றொன்று மெய்யுணர்வு. பொய்யுணர்வு எல்லோருக்கும் உண்டு. மெய்யுணர்வு ஒரு சில பெரியோர்களுக்கு மட்டும்தான் வாய்ப்பதாகும். இந்த வாய்ப்பு வருவதற்கான காரணம் இறைவனை இடைவிடாது நினைப்பதால் ஆகும். இதனால் இறைவன் அவர்கள் முன் வெளிப்படுவான். இதனை திருவாசகம்

"நின்னடியார் பழ குடில் தோறும் எழுந்தருளிய பரனே!" என்று போற்றுகிறது. மெய் என்று எமது உடலிற்கும் ஒரு பெயர் உண்டு. மெய்யான உணர்வினை நாம் தேடிக் கொள்வதால் தான் இப்பெயர் வந்தது. "மெய்யுணர்வு" என்று ஒரு அதிகாரமே வள்ளுவர் வகுத்திருக்கின்றார். இதனால் உணர்வு பற்றி விளங்கும். உயிர்குள்ளே இருக்கும் உணர்வு மெய்யுணர்வு. இது அடியார்களிடத்தே உண்டு.

"எந்தையே ஈசா உடலிட கொண்டாய்" என்கிறார் மணிவாசகர்.
அபிராமிப்பட்டரும் எடுத்த எடுப்பிலேயே உதிக்கின்ற செங்கதிருக்குத் திலக முணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம். என்றார். ஆனால் இன்னும் ஒரு படி மேலே போய் திருமூலர் உடம்பினுள் உள்ளே உறுபொருள் உண்டென்று உடம்பினை இருந்து ஓம்புகின்றேனே என்கிறார்.

இதனால் தான் பூசலா நாயனார் உடம்பினுள்ளே திருக்கோயில் கட்டினார் என்கின்றோம். உயிருக்குள்ளே உள்ள உணர்வை அருளாளர்கள் கண்டுபிடித்து விடுவார்கள் எம் போன்றவர்களுக்கு அது பிடிபடாது.

"உருத் தெரியாக் காலத்தே என் உளப் புகுந்து உள மன்னி" என்பது திருவாசகம். நாம் பிறப்பு இறப்பு என்னும் சுழியில் கிடந்து உழன்று ஒன்றும் தெரியாமல் தத்தளிக்கின்றோம் இதனை கட்டுப்படுத்தி சிவானந்த தேன் பருக வேண்டும் என்றார் இறை நாமத்தை இடைவிடாது சொல்ல வேண்டும் குருவை அடைந்து உபதேசம் பெற்று குருவுக்கு சேவை செய்ய வேண்டும். இதனால் நாம் எங்களுக்குள் இருக்கும் மெய்யுணர்வினை ஒருவாறு தேடிக்கண்டு பிடித்து விடலாம்.

"ஈதனும் பல கோலால பூஜையும் ஓத னு குண ஆசார நீதியும் ஈரமு குரு சீர்பாத சேவையும் மறவாத" என்று அருணகிரிப் பெருமான் நுணுக்கிய நுண்ணுணர்வை பெறும் வழியை ஈண்டு காட்டியுள்ளார்.

"தேடிக்கண்டு கொண்டேன்" என்று அப்பரடிகளின் தேவாரம் சும்மா இருந்தால் இறைவனை அடையமுடியாது என்பதனை விளக்கும் எம்முன்னே உறு பொருளை தேடுவதால் தான் அடையமுடியுமே ஒழிய மற்றும்படிக்கு கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்ற நிலையில்தான் வாழ வேண்டிவரும்.

வடிவேலு ஞானகாந்தன்

# பார்வதி திருக்கல்யாணம்

முன்பு ஒரு காலத்தில் இமய மன்னனான பர்வதராஜனும் அவனது மனைவியான மேனையும் செய்த தவத்தின் பயனாக மகாகாளி புத்திரியாக அவர்களுக்கு அவதரித்தாள். அவள் பர்வதத்தில் அவதரித்தபடியால் பார்வதி என்னும் பெயரைப் பெற்றாள். அவள் சிவபெருமானை விரும்பி வழிபட்டு நன்றாகப் பூசைகளைச் செய்து அவரையே தனது நாயகனாக்கிக் கொள்ள விரும்பினாள். இதன் பயனாக சிவபிரானையே அடைய வேண்டுமென்று மனம் கொண்டவளாய்த் தவம் செய்யச் சித்தம் கொண்டாள். தனது தந்தையாருக்குச் சிவபிரானின் மகிமையைக் கூறி அவர்பால் உள்ள காதலையும் வெளிப்படுத்தினாள். தந்தையாரோ அவளது தாயான மேனை சம்மதிக்காவிட்டால் தர்மசங்கடமாகி விடுமே எனக் கருதி தாயாரிடம் பார்வதியை அனுப்பினான். பார்வதி இப்போது தாய் மேனையிடம் வருகிறாள். தாய் மேனை பார்வதியின் விருப்பத்தைக் கேட்டு அதிர்ச்சி உறுகிறாள். மேனை பார்வதியைப் பார்த்து மகளே! நீ முற்பிறவியில் செய்த நற்பயனின் நிமித்தம் இங்கு வந்து பிறந்தாய். இந்த அரண்மனையில் உனக்கு என்ன குறையுண்டு? நீ எதற்காகத் தவம் செய்ய வேண்டும்? அப்படித் தவம் செய்ய வேண்டுமானால் இந்த மாளிகையிலேயே செய்யலாமே! எங்கள் எல்லோருக்கும் நலம் உண்டாகுமல்லவா. உன் மேனியோ கோமளமானது. உன் உடலோ மிகவும் மென்மையானது நீ செய்யப்போகும் தவமோ மிகவும் கடுமையானது. ஆகையால் தவம் செய்வது உமக்குத் தகுந்ததல்ல மகளே! கூறித் தடுத்தாள்.

இவ்வளவு புத்திமதிகளையும் கேட்ட பார்வதியின் மனமோ சிவபெருமானையே தனது நாயகனாக அடைய வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தது. தாயின் புத்திமதிகள் செவியில் ஏறவில்லை. சிவபிரானையே நினைத்துக் கொண்டிருந்த பார்வதியின் ஏக்கத்தையும் துக்கத்தையும் மேனை புரிந்து கொண்டதும் அவள் நிலைமையைக் கண்டு சகிக்காதவளாய் தவம் செய்யச் செல்ல அனுமதித்தாள். தாயின் அனுமதியைக் கண்ட பார்வதி அகமகிழ்ந்தாள். தாய் தந்தையர் இருவரையும் காலில் விழுந்து வணங்கினாள். உன்னதமான ஆடை ஆபரணங்களைக் களைந்து எறிந்தாள். மரவுரி தரித்தாள். தோழியர்களையும் அழைத்துக்கொண்டு இமயமலைச் சாரலில் உள்ள நதிகளில் நீராடினாள். மலைச் சிகரத்தை அடைந்த பார்வதிதேவி தவம் செய்த சிகரம் கௌரீசிகரம் எனப் பெயர் பெற்றது. அங்கு மரங்களும் செடிகளும் கொடிகளும் மலர்களோடும் கனிகளோடும் செழித்துக் கொழித்தன.

மாமுனிவர்களும் செய்ய முடியாத அருந்தவத்தை பார்வதி செய்து வந்ததைக் கண்ட அருந்தவமுனிவர்களும் வியந்து பிரமித்தார்கள். பார்வதிதேவியின் அருந்தவத்தைக் கண்ட தேவர்களும் மகாரிஷிகளும் சிவபிரானிடம் சென்று தவத்தின் பெருமையை விளக்கினர். அவ்விதம் கூறிய தேவர்**களையும்** நாரதரையும் சிவபிரான் கடைக்கண்ணால் பார்த்து புன்னகை பூத்தபடி தேவர்களே! உங்களைப் போன்றவர்களாலும் காணமுடியாத நான், மலையரசன் மகளான பார்வதி செய்யும் தவத்திற்கு மனமகிழ்ந்து அவளுக்குத் தரிசனம் கொடுத்து அவளையே திருமணம் செய்து கொள்ளப் போவது நிச்சயமாகும் எனத் திருவாய் மலர்ந்தருளி அவர்களைச் சந்தோஷத்துடன் திருப்பி அனுப்பினார்.

இதன்பின்பு சிவபெருமான் சடைமுடி தரித்த ஒரு கிழப்பிராமணராக வேடம் பூண்டு பார்வதிதேவி தவம் செய்து கொண்டிருந்த மலைச் சிகரத்திலுள்ள ஆச்சிரமத்தை அடைந்தார். அவ்வாறு வந்த கிழப்பிராமணரைக் கண்டதும் பார்வதிதேவி பெருமகிழ்ச்சியோடு அவரை வரவேற்று உபசரித்து வழிபட்டாள். அவ்வனத்தில் உள்ள சுவையான பழங்களை உணவாக உவந்தளித்தாள். அப்போது அவரை நோக்கி “நீங்கள் எங்கு வந்தீர்கள்” எனக் கேட்டாள். பிராமணரோ கபடவார்த்தைகள் மூலம் தனது மெய்வடிவை ஒழித்துக் கொண்டார். மேலும் பிராமணர் தேவியைப் பார்த்து “நீயோ இளம் வயதினள் வடிவாகவும் இருக்கிறாய்” என்ன காரணத்திற்காகத் தவம் செய்கிறாய்? உன் அந்தரங்க விஷயம் எதுவாக இருந்தாலும் பேதம் பாராட்டாது என்னிடம் கூறிவிடேன் என்றார். இந்த தவத்தை நீர் விரும்பிய கணவனை அடைய வேண்டுமென்றுதானே செய்கிறாய். அப்படியானால் உடனேயே

நிறுத்திவிடு ஏனென்றால் இரத்தினக் கல்லானது தன்னை வாங்குபவனைத் தேடிச் செல்வதில்லை அதை வாங்குபவன் தானே தேடிவருவான். ஆகவே உமது இளமை, அழகு எல்லாமே வீணாகுகின்றன. உன் அழகான ஆடை ஆபரணங்களையெல்லாம் உதறிவிட்டு தோல், மரவரி போன்றவைகளைத் தரித்து நிற்கின்றாயே அது ஏன் என்று எனக்குப் புரிய வைக்க முடியுமா என்றார். பார்வதிதேவி தனது தோழியர்கள் மூலமாக தான் ஏன் தவம் செய்கிறேன் என்று விபரமாக எடுத்துக்கூறினாள்.

மேலும் கிழப் பிராமணனாக வந்த சிவபெருமான் கிண்டலாக பார்வதியைப் பார்த்து "நீயோ சந்தனத்தை விட்டு சேற்றைப் பூசிக்கொள்ள விளைகிறாயே! சூரிய ஒளியை விட்டு மின்மினியின் மினுக்கு ஒளியைக் கண்டு ரசிக்கிறாயே! அலங்காரமான இந்திரன் முதலான தேவர்களை உதறி விட்டு வெறும் ஆண்டியான சிவனை விரும்புகிறாயே! கருவிழிகள் வாய்ந்த கட்டழகியான உனக்கு சுடலையாண்டிச் சிவன் எம்மாத்திரம்? வெண் நிலா போன்ற உன் முகத்துக்கு அந்த ஐந்தலையாண்டிப் பித்தனா? சந்தனம் முதலிய வாசனைகள் பூசிய மென்மையான உன் மேனிக்கு சுடுகாட்டுச் சாம்பலைப் பூசித் திரியும் பித்தனின் உடலா? ஆகவே உனக்கும் அந்தச் சிவனுக்கும் பொருத்தமோ உருவ ஒற்றுமையோ சிறிதும் கிடையாது. அவனது குலம் குடி முதலியவையும் நன்றாக அறியப்படவில்லை. அந்தச் சிவன் என்ன செல்வந்தனா? ஆண்டிதானே! உலகத்தில் ஆடவர்களுக்குள்ள விஷேட குணங்களில் ஒன்றாவது சிவனுக்குண்டா? அவன் ஏறித் திரியும் வாகனமோ மாடு, உடுத்த உடையோ யானைத்தோல் வீடுகளில் வசிக்க லாயக்கற்றவன் காடுமேடுகளில் சுற்றுபவன். அவன் என்ன சாதியோ தெரியாது. ஆகவே அந்தச் சிவனிடம் உன் மனதைப் பறி கொடுப்பது அவ்வளவு உகந்ததல்ல என்பதை அறிந்து கொள்வாய் அந்தத் தலைவிரித்தாடும் தான் தோன்றிக் கூத்தனை நான் அறிவேன். நான் சொன்ன அறிவுரைகள் உனக்கு இஷ்டமில்லையானால் என் முன் நிற்காதே விலகிப் போய் விடு என்றார்.

அவற்றையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த பார்வதி மிகவும் சீற்றம் கொண்டாள். அவள் கிழட்டுப் பிராமணரை நோக்கி குமுறிக் குமுறி பின்வருமாறு கூறினாள். சிவதூஷனை செய்வதில் வாய்த் தேர்ச்சி பெற்ற கிழவரே! இவ்வளவு நேரமும் உம்மை ஒரு நல்லவர் என்றல்லவா எண்ணியிருந்தேன். இப்போதல்லவா நீ ஒரு ஆபத்தான பேர்வழி என்று புரிந்துகொண்டேன். தேவாதி தேவனான சிவபெருமானை புரிந்து கொண்டேன் என்று முன்பு கூறினீரே! என்னத்தைப் புரிந்து கொண்டீர் நீர் அவரைப் பற்றி அறிந்திருந்தால் நிச்சயமாக அவருக்கு விரோதமாக ஏளனம் சொல்லமாட்டீர். நீர் கூறிய வார்த்தைகள் பொய்யேயன்றி வேறொன்றுமில்லை. நீரோ அறிவில்லா கிழவன் சிவபெருமானைப் பற்றி உமக்கேது புரியும்? பரமாத்மாவாக விளங்கும் சிவபெருமானுடைய உருவத்தை உம்மைப் போன்ற அறிவிலிகளால் எப்படி அறியக் கூடும். சிவபெருமான் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவரே என் மனக் கண்ணிற்குப் பிரியரும் என் விருப்பத்துக்குரியவருமாவர். திரும்பத் திரும்பக் கேட்டாலும் அதையேதான் மீண்டும் மீண்டும் சொல்வேன் எனப் பார்வதி கிழப் பிராமணரைப் பார்த்து வெகுண்டுரைத்தாள். பார்வதிதேவி மிகவும் கோபம் கொண்டவளாய்த் தன் தோழியர்களைப் பார்த்து இந்தக் குறும்புக் கிழவரை இவ்விடத்திலிருந்து துரத்திவிடுங்கள் இல்லாவிட்டால் இங்கிருந்து கொண்டு சிவநிந்தையே செய்து கொண்டிருப்பார் எனக் கூறி விட்டுத் தன் தோழியர்களுடன்

அந்த இடத்தை விட்டு வேறு இடம் செல்ல காலடி எடுத்து வைத்தபோது கருணா மூர்த்தியான சிவபெருமான் தமது மாறுவேடத்தை நீக்கி தம் சுயவடிவமெடுத்து சிவபெருமானாக காட்சியளித்தார். அவரது சுய உருவத்தைக் கண்ட பார்வதிதேவி வெட்க மேலீட்டால் தலைகுனிந்து தான் சிவபெருமானைத்தானே இவ்வளவு நேரமும் கோபம் கொண்டு நிந்தித்தேன் என்று மனம் வருந்தியவள் துன்பக் கண்ணீருடன் சேர்ந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். சிவபெருமான் அவளை உற்று நோக்கி புன்னகை பூத்து பார்வதி! நீ என்னை விட்டு எங்கே போக முடியும். உன் தவத்திற்காக மகிழ்ந்த நான் உன் முன் தோற்றமளித்தேன். உன் மனதைச் சோதிப்பதற்காகவும் உமக்கு கோபமூட்டி அதனால் வரும் வாய்வீச்சுக்களையெல்லாம் ரசிப்பதற்காகவே விளையாட்டாகவே இப்படி உன் மனதை நன்றாகச் சோதித்துவிட்டேன். உன் திடபக்தியைக் கண்டு உவந்தேன். உன் தவத்தினால் என்னை நீ வந்தடைவாய் எனக் கூறி விடைபெற்றார். இதன்பின்பு பார்வதிதேவி

களிப்புற்றவளாய் தன் தோழியர்களுடன் இமாசலத்திலுள்ள அரண்மனைக்குத் திரும்பினாள். தன் மகள் பார்வதியைக் கண்ட மகாராணி மேனை மிகவும் சந்தோஷம் கொண்டவளாய் தன் புதல்வியை எதிர்கொண்டு வரவேற்றாள். பார்வதியை சந்தன மலர்களால் அலங்கரித்து அரண்மனைக்கு அழைத்துச் சென்றாள். அப்போது பர்வதராஜனின் அரண்மனை முழுவதும் மங்களகரமாயிற்று. தாய் தந்தையர் பார்வதியை நோக்கி "உம்மால் நாங்கள் யாவரும் தூய்மையடைந்தோம்" எனக் கூறினர். அத்தருணத்தில் நாரதமுனிவர் அங்கே இருந்தார். பர்வதராஜன் நாரதரைப் பார்த்து "ஆயிரம் நூர் புத்திரர்களைப் பெறுவதிலும் பார்க்க ஒரு நற் புதல்வியைப் பெறுவது மேல்" என்று கூறினார்.

பார்வதிதேவிக்கு திருமணம் செய்வதாக உறுதி கூறிய சிவபெருமான் பின்பு காசிமானைகள் என்னும் புண்ணிய ஷேத்திரத்தை அடைந்தார். அங்கே ஷப்த ரிஷிகளை அழைத்து பார்வதியின் தவத்தின் மகிமையைக் கூறி அவளைத் தான் திருமணம் செய்யச் சித்தம் கொண்டிருப்பதாகக் கூறி ஷப்த ரிஷிகளை பார்வதிதேவியின் தந்தையான பர்வதராஜனின் மாளிகைக்குச் சென்று அந்த அரசனையும் மனைவியையும் சந்தித்து நற்செயல் நிறைவேறும் வண்ணம் திருமணம் பேசி பார்வதியை எனக்கு மணம்முடிக்கும்படி விரும்புகிறேன் என்று மலர்ந்தருளினார். இதைக் கேட்ட ரிஷிகள் ஆனந்தப் பரவசமடைந்து பர்வதராஜனின் மாளிகையை நோக்கினர். அரண்மனையை அடைந்த ரிஷிகள் மகாராஜனைப் பார்த்து மகாராஜனே! உலகத்தையே ஆழும் சிவபெருமான் சகல சீவன்களுக்கும் சுகம் நல்க விருப்பம் கொண்டு எங்கள் மூலம் உங்கள் புதல்வியான பார்வதிதேவியைத் தன் நாயகியாக்கிக் கொள்ள நாடுகிறார்.

தொடரும்............

பொ. பாலசிங்கம்

ஓம் சிவசக்தி ஓம்.

# வாழ்வின் தத்துவங்கள்

பிராணாயாமமும் சத்திரநுணுக்கமும். நாம் எல்லோரும் குழந்தைகளாய் வாழ்வை வம்சா வழியைத் தொடங்குகிறோம். தொடர்கிறோம். நம் பெற்றோர்கள் நம்மைப் பேணி வளர்க்கிறார்கள்.

பிறப்பின் நேரத்தைக்குறித்து இடம், காலம், கிரகம், கோள், வான், திசை இவற்றைக் கணித்து. குறிப்பு எழுதி அதன் பலன் பார்த்து,வாழ்வு முறைகளை அதற்கிணங்க வழிப்படுத்தி, இன்புறவது நம் பழமைகளுள் ஒன்றாகும்.

குறிப்பு பார்ப்பதில் சில பல உண்மைகள் உண்டு என்பதை நாம் ஓரளவு அறிவோம். அச்சாத்திரத்தின் மூலாதாரம் பிறப்பு. பிறந்த வருடத்தை ஒட்டித் தமிழில் 60 வகையாகவும். சீனத்தில் 12 வகையாகவும் குணங்களைப் பகுப்பர். அதே போன்று பிறந்த திகதி எண்ணைக் ஒட்டிப் பத்து வகைக் குணங் காட்டும் குறிகூறுவர்.

குறிப்பிட்ட ஒரு தாயின் கர்ப்பத்திலிருந்து, அவ்விடத்தில், அந்நேரத்தில், அச்சூழ் நிலையில் நடக்கும் நிகழ்ச்சி இதற்கு முன் என்றுமே தோன்றாத ஒன்று. இனிமேற் திரும்பவும் தோன்ற முடியாததொன்று. அதுவே பிறப்பு, ஒரே பிறப்பு, தனிப்பிறப்பு, அப்பிறப்பின் சரியான நேரம் என்ன? கர்ப்பத்தில் கரு உருவான நேரமா? தாயிலிருந்து குழந்தையின் தலையோ காலோ வெளிவரும் நேரமா? குழந்தையின் முழு உடலும் வெளியேறிய நேரமா? தாயுடன் தொடுத்திருக்கும் தொப்பூழ்க் கொடி துண்டிக்கப்படும் நேரமா? குழந்தை முதல் முதலில் அழுகுரல் கொடுக்கும் நேரமா? குழந்தை முதல் முறையாகக் கண் திறந்து உலகைப் பார்க்கும் நேரமா? குழந்தை முதலில் தானே பால் பருகும் நேரமா?

இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு முக்கியத்துவம் இருப்பினும், குழந்தையின் முதல்மூச்சே தனிப்பிறப்பின் தோற்றமாகும். மூச்சு எடுப்பதும் விடுவதும் பிராணாயாம யோகப்பயிற்சி. தாயின் பிராணனோடு ஒன்றாக இருக்கும். கரு, குழந்தையாகப் பிறந்து, மூச்சு இழுத்து விடும் யோகத்தைத் தொடங்கும் தருணத்தையே, தனிப் பிராணனின் தோற்ற நிகழ்ச்சியாகக் கருதிக் கணிப்பது சாத்திரநுணுக்கம்.

இதோடு தொடர்புள்ள படியே தத்துவ வார்த்தைகள் சில. விளையும் பயிரை முளையிற் தெரியும். பிராணவாயு என்பது சடப்பொருள், பிராணம் என்பதோ வேறு சத்து அசத்தைச் சாராது.

சத்தியம் சிவம் சர்வம்.
சத் சித் ஆனந்தம்

ஓம் சிவசக்தி

திரு. வீ. தியாகராஜ

# அறிவுக்கு விருந்து

1 ஒழுக்கமே உயந்த அழகு. கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டு, ஊக்கத்துடன் உழைத்தலே வாழ்வு, என்னும் இரு அரிய உண்மைகளை உணர்வது நல்லது, ஆன்மீகப்பற்றுக் கொண்டு அதன் உதவியுடன், பொறாமை,கோபம், முதலியவற்றை ஒழியுங்கள், இவற்றைச் செய்தால்,வாழ்க்கைச் சவால்களை வெல்ல முடியும்,

2 மக்களுக்குத் தொண்டு செய்வதே இறைவனை உண்மையில் வணங்கிப் பிரார்த்தனை செய்யும் உயர்ந்த பிரார்தனையாகும், நம்மைச் சுற்றியுள்ள அனைவரையும் அன்புடன் நேசித்தலே, மிகஉயர்ந்த பூஜையாகும், இந்த இரு குணங்களே இறைவன் மீதுகொண்டுள்ள உண்மையான அன்பையும் பக்தியையும் வெளிக்காட்டும் ஆதாரங்கள். (சுவாமி சின்மயானந்தா)

3 இறைவனை முழுமையாக நம்புங்கள், அவருடைய வழிகாட்டலை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளுங்கள், ஆன்மீகத்தில் பற்று வையுங்கள் இரண்டாவதாக உங்களை நம்புங்கள் உங்களைச் சுற்றியுள்ளவர்களையும் கடவுளை நம்புவது போல் நம்புங்கள்,வீணே சந்தேகப் படாதீர்கள், எதிர்மறையாகச் சிந்திப்பதையும் உடனே நிறுத்துங்கள். இப்போது உங்களிடம் மாற்றம் தெரியும். நான் செயல்பட வேண்டும் என்ற தன் நம்பிக்கையும் சத்தியும் உங்களுக்குள் தோன்றுவதை நீங்கள் உணர முடியும்.

4 வாழ்க்கை முழுவதும், மகிழ்ச்சியாயும் படைப்பாற்றல் நிரம்பிய சாதனை மனிதனாகவும் உள்ளவன் மூன்று விசயங்களில் கவனம் செலுத்துவான்-அவை- நம்பிக்கை, சிந்தனை, செயல் (நோர்மன் வின்ஸன்பீல்)

5 பசிவந்தால் பத்தும் பறந்து விடும் (என்பர்கள்) அவையாவன மானம், குலம், கல்வி, வன்மை, தானம், தவம், முயற்சி அறிவுடமை, தாளாண்மை,காமம்.

6 உலகின் முக்கிய மொழிகள் (வரிசைப்படி20) சீனம், ஆங்கிலம், இந்தி, ஸ்பானிஷ், ரஸ்யன், அரபி, வங்காளி, போர்த்துக்கீசு, மலாய், இந்தோனேசியன், ஜப்பான், பிரெஞ்சு, ஜெர்மன், உருது, பஞ்சாபி, கொரியன், தெலுங்கு, தமிழ், மாரத்தி, இத்தாலியன், ஜவானிஷ் (மற்றும்சில).

6 உலகின் முக்கிய சமயங்கள்.
கத்தோலிக்க சமயம்.
இந்து சமயம்.
இஸ்லாம் சமயம்.
புறட்டஸ்தாந்து சமயம்.
கொன்பியூசியஸ் சமயம்.
புத்த சமயம்.
திரிபாலஸ் சமயம்.
தாஓயிஸ்ட் சமயம்.
ஜெயின சமயம்.
சீக்கிய சமயம்.
மற்றும் சில

தொகுப்பு
(இணுவைக் குமரன்.)

உ

சிவமயம்

# கண்ணப்பரும் காளத்தியப்பரும்

*திருநெறிய தமிழ்வேந்தர்*
*தமிழ்மணி*
*அகளங்கன்*

ஆதியும் அந்தமு மில்லா அரும்பெருஞ்சோதியாய் இருக்கும் சிவபெருமானை முழுமுதற் பரம் பொருளாகக், கடவுளாக வழிபடும் சைவசமயத்திற்கும் ஆதியுமில்லை அந்தமுமில்லை. தொன்மையும் வன்மையும் மிக்க சைவசமயத்தில் வழிபாட்டு முறைகளை நான்காக வகுத்தனர் முன்னோர்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவையே அவை, இப்படி வகுத்துக் கூறியபோதும் இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அமைந்தது ஆழ்ந்த பக்தியே என்பது அவர்கள் கண்ட உண்மையாகும்.

அன்பெனும் வலையில் அகப்படும் இறைவன்மேல் பக்திசெலுத்துவதே முக்திக்கு வழிகோலும் என்று, ஞானமார்க்கத்தில் நின்று சாயுச்சிய முத்தியடைந்தவரான மாணிக்கவாசக சுவாமிகள் அச்சோப்பதிகத்தில் அற்புதமாகத் தெளிவாகப் பாடுகின்றார்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சிதமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

பிராமணர்களும், ரிஷிகளும் ஆகவனீயம், காருகபத்தியம், தெக்கிணாக்னீயம், எனும் முத்தீ வளர்த்து ஆகுதி சொரிந்து முத்தி அடைந்தார்கள். சாதாரணர்களோ பக்தி வளர்த்து அன்பைச் சொரிந்து முத்தியடைந்தார்கள்.

ஆண்டவனைப் பற்றிய அறிவோ அல்லது ஆண்டவனுக்குரிய பூசை விதிமுறைகளைப் பற்றிய அறிவோ சிறிதும் இல்லாத, மிருகங்களைக் கொன்று தின்னும் பாவச்செயலில் அன்றாடம் ஈடுபடும் வேடுவர் குலத்தில் தோன்றி கொல், எறி, குத்து, வெட்டு என்னும் சொற்களேயன்றித் தோத்திரச் சொற்களோ சாத்திரச் சொற்களோ தெரியாதவராய் வளர்ந்த கண்ணப்ப நாயனார் என அழைக்கப்படும். திண்ணனார், காளத்தியப்பர்மேல் செலுத்திய பக்தி அவருக்கு முத்தி கொடுத்த வரலாற்றைப் பெரியபுராணத்திலே படித்துப் புளகாங்கிதம் அடைகிறோம்.

“பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவன்” என்று போற்றப்படும் சேக்கிழார் பெருமான் கண்ணப்ப நாயனார், பக்தி ஒன்றையே மூலதனமாகக் கொண்டு ஆறு நாட்களுக்குள் முத்தியடைந்த வரலாற்றை அதிஅற்புதமாகப் பாடியிருக்கிறார்.

பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூர் என்னும் காட்டுப்பகுதியில் வாழ்ந்த வேடுவர் தலைவன் நாகனுக்கும், அவன் மனைவி தத்தைக்கும் முருகன் அருளால் திண்ணனார் பிறந்தார். கையிலே தூக்குவதற்குக் கனமாக (பாரம்) இருந்த காரணத்தால் திண்ணனார் என அவர்க்குப் பெயர் சூட்டினர். திண்ணனார் வளர்ந்து வில்வித்தை முதலான படைக்கலப் பயிற்சி பெற்று வேடுவர் குலத்தின் தலைமைப் பொறுப்பைப் பெற்றார்.

தன்குல மறவர்களாம் வேடுவர்களோடு வேட்டைக்குச் சென்ற திண்ணனார், மிகவும் வல்லமை பொருந்திய பெரியபன்றி ஒன்று தாங்கள் கட்டிய வார் வலையையும் அறுத்துக் கொண்டு ஓடுவதைக் கண்டு அதனைத் துரத்திச் சென்றார்.

நாணன், காடன் என்ற இருவரும் திண்ணனாரைத் தொடர்ந்து சென்றனர். திண்ணனார் தாம் துரத்திச் சென்ற அப்பன்றியை வாளினால் வெட்டிக் கொன்றார். பின்பு நாணனும் காடனும் வந்துசேர நீர் வேட்கையினாலே, பன்றியைத் தூக்கி வரும்படி பணித்து விட்டுப் பொன்முகலி ஆற்றுக்குச் சென்றார்.

பொன்முகலி ஆற்றங்கரையை அடைவதற்கு முன்பே. காளத்தி மலையைக் கண்டு அதன் மேலே ஏறவேண்டும் என்ற தாளாத விருப்புக் கொண்டார். காடனைப் பன்றியைச் சுடுவதற்குத் தீ மூட்டும்படி பணித்து விட்டு நாணனோடு திருக்காளத்தி மலையிலே இருக்கின்ற குடுமித் தேவரைக் கும்பிடச் சென்ற திண்ணனார் கொஞ்சங் கொஞ்சமாகப் பக்திவசமாகத் தொடங்கினார்.

குடுமித் தேவரைக் கண்டவுடனே ஒடிச் சென்று கட்டித் தழுவி உச்சிமுகர்ந்து தலையன்பாம் தாயன்பைக் காட்டி நின்றார். அவரது அந்நிலையைப் "பொருவில் அன்பு உருவமானார்" என்று சேக்கிழார் சுவாமிகள் புகழ்கின்றார்.

அந்தக் காளத்தியப்பருக்குச் சிவகோசரியார் என்னும் பிராமணோத்தமர் ஆகம விதிமுறை பிறழாவண்ணம் மஞ்சனமாட்டி மலரிட்டு மந்திரமோதி நெய்வேத்தியம் நிவேதித்துப் பூசை செய்திருந்ததைக் கூடப்புரிந்து கொள்ள முடியாதவராக நாணனைப்பார்த்து "இந்தப் பச்சிலையோடு பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து மச்சிது செய்தார் யாரோ" என்று கேட்க நாணன் சொல்கிறான். உன் தந்தையும் நானும் முன்பு இங்குவந்தபோது ஒரு பிராமணர் இப்பெருமானைக் குளிர்நீராட்டி இலைகள் பொருந்திய பூவையும் சூட்டி. உணவுபடைத்து முன்னால் நின்று ஏதோ சொன்னார். அவர் செயலே இதுவாக இருக்கும் என்கிறான்.

வன்திறல் உந்தையோடு
மாவேட்டை ஆடிப்பண்டுஇக்
குன்றிடை வந்தோமாகக்
குளிர்ந்தநீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச்சூட்டி
ஊட்டி முன் அறைந்தோர்பார்ப்பான்
அன்றிது செய்தான் இன்றும்
அவன் செய்த தாகும் என்றான்

*(பெரி கண் - 109)*

அதுவே ஆண்டவனுக்குப் பிடித்தமான பூசையென அறிந்து கொண்ட அவர் அதே வழிபாட்டைத் தானுஞ் செய்ய விரும்பினார். இருப்பினும் அவர் செய்த பூசை முற்று முழுதாக அனாச்சாரமாகவே இருந்தது.

மலர்களைப் பறித்துத் தன் தலையிலே சுமந்து கொண்டு. பொன்முகலியாற்றுப் புனித நீரைத் தன் வாயிலே முகந்து கொண்டு. பன்றியைச் சுட்டுப் பதப்படுத்தித் தன் வாயில் போட்டுக் கடித்துச் சுவை பார்த்த பின்பு தேக்கங்கல்லையில் இட்டு ஒருகையில் தூக்கியபடி ஒருகையில் வில்லம்பைத் தாங்கிக் காளத்தியப்பரின் அருகே வந்த திண்ணனார் சிவகோசரியார் அங்கிருந்த சிவலிங்கப் பெருமானின் திருமுடியில் சொரிந்து வழிபட்டதால் கிடந்த பூக்களாகிய நிர்மாலியங்களைத் தன் தோற் செருப்பணிந்த காலினால் தட்டித் தன்வாயில் முகந்து கொண்டுவந்த நீரினால் திருமஞ்சனம் செய்து தலையில் சுமந்து வந்த பூக்களைத் திருமுடிமேல் சிந்தி வாயில் அதுக்கிப் பதம்பார்த்துக் கொண்டு வந்த பன்றி இறைச்சியைத் திருமுன்பு படைத்து மந்திரத்துக்குப் பதிலாகப் பன்றியிறைச்சியின் சுவையின் பெருமையைச் சொல்லி வழிபாடாற்றினார்.

இவரது வழிபாட்டு முறையிலே அன்பின் முதிர்ச்சியாகிய பக்தி வெளிப்பட்டதே அன்றி ஆசாரம் சிறிதும் இருக்கவில்லை. ஆகம முறைப்படி பூசை செய்யும் சிவகோசரியார் ஆசாரமற்ற திண்ணனாரின் பூசையை வெறுத்து ஆண்டவனிடம் முறையிட்ட பொழுது சிவபெருமான் சிவகோசரியாரின் கனவில் தோன்றித் திண்ணனாரின் செய்கைகளைப்பற்றிச் சிறப்பாகப் பாராட்டுகின்றார்.

திண்ணனாரின் செருப்புப் பாதங்கள் தன் திருமுடியிலே படும் பொழுது இளம்பருவத்து முருகப்பெருமானின் பாதங்கள் தன்மேல் பட்டது போலிருந்ததாகவும், திண்ணனார் வாயிலே முகந்து கொண்டுவந்து தன் முடிமேல் ஊற்றிய நீர் புனித கங்கை நீரிலும் சிறப்பானது என்றும். திண்ணனார் தனது தலையிலே சுமந்து கொண்டுவந்து தனது முடிமேல் சிந்திய மலர்கள் பிரம்மா விஷ்ணு முதலான தேவர்கள் தன்மேல் சொரிகின்ற கற்பக தருக்களின் மலர்களிலும் சிறப்பானவை என்றும். பல்லினாற்

கடித்து நாவினால் சுவைபார்த்துக் கொண்டு வந்து வைத்த பன்றி இறைச்சி சிறந்த வேதங்களை ஒதுகின்ற பிராமணர்கள் வேதமுறைப்படி செய்கின்ற வேள்வியில், அக்கினியில் இடும் "அவி" உணவிலும் மிகவும் சிறப்பான தென்றும், திண்ணனார் சொல்லுகின்ற வார்த்தைகள், மந்திரங்களைவிடச் சிறப்பானவை, முனிவர்களின் தோத்திரங்களை விடச் சிறப்பானவை என்றும் சொல்லித், திண்ணனார் தம்மேல் வைத்த பக்தியின் உச்சத்தை நாளை காட்டுவதாகக் கூறி மறைகின்றார்.

மறுநாள் வழமைபோலத் திண்ணனார் வந்து கொண்டிருந்தார். சிவகோசரியார் மறைந்து நின்று பார்த்தார். சிவலிங்கத் திருமேனியின் வலது கண்ணிலே இருந்து இரத்தம் வழிந்தோடுவதைக் கண்டு திண்ணனார் திகைத்துப் போனார். யார் இக் கொடுமை செய்தார் என்று கோபித்தார். பச்சிலை மூலிகைகளைப் பறித்து வந்து கண்ணிலே பிழிந்து பார்த்தார். இரத்தம் நிற்கவில்லை.

பெருகிய இரத்தங் கண்டு உருகிய மனங்கொண்டவராய் "ஊனுக்கு ஊன் மருந்து" என்னும் வேடர்களின் வாக்கு நினைவுக்குவர, கூரிய ஓர் அம்பை எடுத்துத் தனது ஒரு கண்ணைத் தோண்டி அப்பினார். அக்கண்ணில் நின்றும் இரத்தம் வருவது கட்டுப்பட ஆனந்தக் கூத்தாடினார்.

சிறிது நேரத்தில் இடக்கண்ணிலிருந்தும் இரத்தம் பெருகச் செய்தார் சிவபெருமான். திண்ணனார் சிறிதும் மனந் தளரவில்லை. கலங்கவில்லை. தனது மற்றைக் கண்ணையும் தோண்டி அப்ப முயன்றார். தனது செருப்புக் காலை அடையாளமாக இரத்தம் வந்த கண்ணிலே ஊன்றித் தனது கண்ணைத் தோண்ட முயலும் போது சிவபெருமான் தனது கைகளால் அவரது கையைப் பிடித்துத் தடுத்து "நில்லு கண்ணப்ப" எனக் கூறினார். அத்தோடு தனது வலப்பாகத்தில் என்றும் நீங்காமல் நிலைத்திருக்கும் அரியபேற்றையும் நல்கினார்.

சேக்கிழார் பெருமான் இக்கதையின் மூலமாக வழிபாட்டுக்குப் பக்தி எவ்வளவு சிறந்தது என்பதை வலியுறுத்துகிறார். புற ஆசாரங்கள் பக்தியாகா. அவை பக்திக்கு வழிகாட்டுபவையே. உத்தமனார் வேண்டுவது உள்ளக் கமலமே. உள்ளத்தில் கண்டு கொண்டால் சிவனை வெளியிலும் காணலாம்.

"நில்லு கண்ணப்ப" என்று சிவபெருமானால் தடுக்கப்பட்டதால் கண்ணப்பர் என அவர் பெயர் பெற்றுக் "கண்ணப்ப நாயனார்" எனப் பெரிய புராணத்தில் சேக்கிழாரால் பெருமையோடு பேசப்படுகிறார்.

கண்ணப்ப நாயனாரின் ஆழ்ந்த பக்திபற்றிப்பலரும் பலவாறாகப் புகழ்ந்துள்ளனர். "நாளாறிற் கண்இடந்து அப்ப வல்லேன் அல்லேன்" என்று பட்டினத்தாரும் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி" என மாணிக்கவாசக சுவாமிகளும் போற்றித் துதிக்கின்றனர்.

அகத்தைத் தூய்மை செய்து அன்பின் வலிமையால் ஆண்டவனை உள்ளத்தமர்த்திப் பக்தியால் வழிபாடாற்றிப் பரமனைப்பணிந்து வாழ்வோம்.

திருசிற்றம்பலம்

நன்றி சிவதத்துவ மலர்

**ARUL MIGU THURKADEVI HINDU SOCIETY OF BC**
**DETAILS OF INFLOW AND OUTFLOW**
From Jan.1 99 - Nov. 30,2000

## INFLOW - AVENUE

| | 2000 Jan-Nov | 1999 Jan-Dec |
|---|---|---|
| Arjunnai offerings | 15,105.00 | 14,500.00 |
| Donation-General | 10,644.23 | 11,624.00 |
| Membership Fee | 11,985.00 | 11,915.00 |
| Pooja offerings | 33,628.70 | 27,520.00 |
| Donation-Block | 63,974.00 | 75,935.00 |
| Temple Fundraising - Thillai Kalalayam | 5,600.00 | - |
| Wedding - contribution | 7,075.00 | |
| Undial contribution | 4,585.34 | 3,821.36 |
| Bank interest | 77.83 | 79.28 |
| Sales:Books & Cassettes | 3,196.68 | |
| Interest Free Loan - by devotees | 63,500.00 | 221,313.20 |
| From Advanced in year.1999 for Books | 1,000.00 | |
| Received from VanCity Mortgage | | 275,000.00 |
| Received from Mortgage- 2 | | 50,000.00 |
| Excess drawing in VanCity as at Dec.31,99 | | 5,416.35 |
| Cash Brought Forward from Dec,99 | 2,085.94 | |
| **Total** | **222,457.72** | **697,124.19** |

## OUTFLOW - AVENUE

| | | 2000 Jan-Nov | | 1999 Jan-Dec |
|---|---|---|---|---|
| Cost of books | | 1,000.00 | | - |
| Cost of service | | 19,103.42 | | 17,011.61 |
| Land & Building | | - | | 550,000.00 |
| TAXES: | Transfer | - | 9,000.00 | |
| | Property | 3,088.26 | 761.80 | 9,761.80 |
| Lawyer's | Bank lawyer | 1,101.05 | 2,736.48 | |
| | Charity Application | | 200.00 | |
| | Loan fee | | 1,375.00 | |
| | Martgage deed | | 5,380.85 | 9,692.33 |
| Mortgage -repayment | | 5,693.46 | | 2,005.90 |
| Advances | | | | 3,000.00 |
| Temple Vikrakam & Decoratives | | - | | 13,800.00 |
| Rent-Kingsway Temple | | - | | 11,200.00 |
| Interest Payments- mortgages | | 21,859.35 | | 7,757.87 |
| Temple maintenance & administration | | 3,477.96 | | 4,835.52 |
| Hydro - payments | | 3,149.20 | | 3,555.29 |
| Telephone | | 394.44 | | 518.93 |
| Building repairs | | 3,485.72 | | 3,834.80 |
| VanCity Saving contribution | | 50.00 | | 50.00 |
| Insurance payment | | 1,701.00 | | 1,701.00 |
| Mortgage- 2 repayment | | 50,000.00 | | |
| Interest Free - repayment | | 99,500.00 | | 56,313.20 |
| Cash on Hand - end of the period | | | | 2,085.94 |
| Bank previous O/d Deposit | | 5,416.35 | | |
| Cash - bank 30-11-2000 | | 3,437.51 | | |
| **Total** | | **222,457.72** | | **697,124.19** |